# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:138 **தேதி**:-02.11.2016

**துணை டவர் நிறுவனம் அமைக்கும் முயற்சிக்கு எதிராக அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் இதர செய்திகள்**

அன்பார்ந்த தோழர்களே,

01.11.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களுடன், தோழர் சுவபன் சக்கரவர்த்திDy.GS BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌதம்Dy.GS SNATTA ஆகியோர் கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள DIRECTOR(HR) திருமிகு சுஜாதா ரே அவர்களை சந்தித்து துணைடவர் நிறுவனம் அமைக்கும் முயற்சிக்கு தங்களின் கடும் எதிர்ப்பினை தெரிவித்தனர். அதற்கு பதிலளித்த DIRECTOR(HR) துணை டவர் நிற்வனம் அமைப்பதற்கான அமைச்சரவைக் குறிப்பிற்கு மத்திய தொலைதொடர்பு அமைச்சர் ஒப்புதல் வழங்கிவிட்டதாகவும், இதன் பின்னர் அது அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். இந்த முடிவு BSNL நிறுவனத்தினை சீரழிப்பதாக உள்ளதால், அதனை தடுக்க ஊழியர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வார்கள் என தொழிற்சங்க தலைவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக விவாதிக்க அனைத்து சங்கங்களின் கூட்டத்தை 16.11.2016 அன்று மாலை 3 மணிக்கு BSNL MS சங்க அலுவலகத்தில் நடத்திட BSNLEU, NFTE ஆகிய இரண்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பொது செயலாளர்களும் கூட்டாக அறிவிப்பினை வெளியிட்டுள்ளனர்.

**கடந்த காலத்தில் தவறுதலாக வழங்கப்பட்டஅதிகப்படியான தொகையினை பிடித்தம் செய்யாதீர்**:- ஊழியர்களுக்கு கடந்த காலங்களில் தவறாக வழங்கப்பட்ட கூடுதல் தொகைகளை பிடிக்க தடை செய்து போடப்பட்ட DOP&T உத்தரவினை DOT Endorse செய்யவில்லை என்பதால் BSNL நிறுவனத்தில் அந்த உத்தரவு இன்னமும் அமுலாக்கப்படாமல் உள்ளது. இது தொடர்பாக DOTயில் உள்ள DDG(Estt) திரு S.K. ஜெயின் அவர்களை BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 02.11.2016 அன்று சந்தித்து கடிதம் ஒன்றினையும் கொடுத்து ஊழியர்கள் படும் துயரங்களை எடுத்துரைத்தார். இதில் தலையிட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என DDG(Estt) சாதகமாக பதிலளித்துள்ளார்.

**ஊதிய மாற்றக் குழு அமைப்பது தொடர்பாக**:- 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்தினை விவாதிப்பதற்கான குழுவினை விரைவில் அமைக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கமும், United Forumம் தொடர்ந்து வற்புறுத்துவதுடன், 08.09.2016 அன்று தர்ணா போராட்டத்தையும், 20.09.2016 அன்று உண்ணாவிரத போராட்டத்தையும் நடத்தியுள்ளன. இந்த சூழ்நிலையில் DOT மற்றும் DPEயின் உத்தரவு இல்லாமல் இந்தக் குழுவை அமைக்க முடியாது என கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் ஒன்று வெளியிட்டுள்ளது. அதிகாரிகளின் ஊதிய மாற்றத்திற்காக அமைக்கப்பட்டுள்ள 3ஆவது ஊதிய பரிந்துரைக்குழு ஒரு சில மாதங்களில் அதன் பரிந்துரைகளை வழங்க உள்ள சூழ்நிலையில் ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் தொடர்பாக பேச்சு வார்த்தைக் குழு அமைக்காதது சரியல்ல என்றும், கார்ப்பரேட்

அலுவலகத்தின் இந்த நிலைபாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், விரைவில் அனைத்து ஊழியர் சங்கங்களையும் ஒன்று திரட்டி இயக்க நடத்த உள்ளதாகவும் நமது சங்கத்தின் சார்பாக தெரிவித்துள்ளோம்.

இது தொடர்பாக உத்தரவுகளை வெளியிட வேண்டும் என BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 02.11.2016 அன்று DOTயில் உள்ள திரு பவன் குப்தா DIRECTOR (PSU-1) அவர்களை கேட்டுக் கொண்டார். மேலும் அனாமலிகளின் தீர்விற்கான BSNLன் முன்மொழிவுகள் DOTயின் ஒப்புதலுக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்தார். இந்த இரண்டு பிரச்சனைகளிலும், தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக DIRECTOR (PSU-1) உறுதி அளித்துள்ளார்.

**BSNLல் பணியாற்றும் DOT ஊழியர்களுக்கு 7வது ஊதிய மாற்றக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துக:-** 7ஆவது ஊதிய மாற்றக் குழுவின் பரிந்துரைகளை BSNLல் பணியாற்றும் DOT ஊழியர்களுக்கு அமுலாக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வற்புறுத்தி வரும் BSNL ஊழியர் சங்கம் 02.11.2016 அன்று திருமிகு மது அரோரா GM(Estt) அவர்களை சந்தித்து விவாதித்தது. இதனை பரிசீலிக்க அமைக்கப்பட்டுள்ள குழு நவம்பர் 7ஆம் தேதி கூட உள்ளதாகவும், அன்று இது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்றும் அவர் பதிலளித்துள்ளார்.

**2015-16ஆம் ஆண்டிற்கான JTO LICE தேர்வுகளை தள்ளி வைக்காதீர்:-** 11.12.2016 அன்று நடைபெறுவதாக உள்ள 2015-16ஆம் ஆண்டிற்கான JTO LICE தேர்விற்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 07.11.2016 வரை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இதனை காரணமாக கூறி தேர்வினை தள்ளி வைக்கக் கூடாது என தோழர் P.அபிமன்யு GS BSNLEU, தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌவதம் Dy.GS SNATTA ஆகியோர் gm(Rectt &Trg) திருமிகு அனிமா ராய் அவர்களிடம் வற்புறுத்தி உள்ளனர். அவரும் தேர்வு அதே தேதியில் கண்டிப்பாக நடைபெறும் என உறுதி அளித்துள்ளார்.

**ஒப்பந்த ஊழியர் பிரச்சனையில் அங்கீகரிக்கப்ப்ட்ட சங்கங்களின் பங்கு:-** ஒப்பந்த ஊழியர் பிரச்சனைகளை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடம் கூட விவாதிக்கக்கூடாது என தெரிவிக்கும் 21.10.2016 தேதியிட்ட கார்ப்பரேட் அலுவலக உத்தரவிற்கு தங்களின் கடுமையான எதிர்ப்பினை DIRECTOR(HR) திருமிகு சுஜாதே ரே அவர்களிடம் 01.11.2016 அன்று நடைபெற்ற கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் சுவபன் சக்கரவர்த்திDy.GS BSNLEU மற்றும் தோழர் சுனில் கௌதம்Dy.GS SNATTA ஆகியோர் தெரிவித்தனர். ஊழல் அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்த ஒப்பந்த தாரர்கல் நிறுவனத்தின் கோடிக்கணக்கான பணத்தினை கொள்ளை அடிப்பதை கண்ணை மூடி வேடிக்கை பார்க்க முடியாது எனவும் அவர்கள் மனித வள இயக்குனரிடம் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**